| Register Number | | | | | | |
|---|---|---|---|---|---|---|

**Part III**

# இந்தியப் பண்பாடு
# INDIAN CULTURE

( Tamil Version )

நேரம் : 3 மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 200

## பகுதி - அ

I. **எல்லா** வினாக்களுக்கும் விடையளி.

அ. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும் 10 × 1 = 10

1. இந்தியாவில் ஆரியர்கள் குடியேறிய பகுதி

அ) சப்த சிந்து ஆ) ஆரியவர்த்தம்

இ) சிந்துவெளி பகுதி ஈ) கங்கைச் சமவெளிப் பகுதி.

2. பிந்திய வேத காலத்தில் ஆரியர்கள் தெய்வங்களை கீழ்க்கண்டவாறு பிரித்தனர்.

அ) இரண்டு ஆ) மூன்று

இ) நான்கு ஈ) ஐந்து.

3. சமயத்தில் சாராது ஆன்மீகத்தை வலியுறுத்திக் கூறும் நூல்

அ) சிலப்பதிகாரம் ஆ) சீவக சிந்தாமணி

இ) திருக்குறள் ஈ) குண்டலகேசி.

4. சமண தீர்த்தங்கரர்களின் எண்ணிக்கை

அ) இருபத்து இரண்டு ஆ) இருபத்து மூன்று

இ) இருபத்து நான்கு ஈ) இருபத்து ஐந்து.

[ Turn over

5. சமுதாயத்தின் அங்கத்தினராகிய ஒவ்வொருவரும் தத்தம் கடமைகளை முறையாகவும் திறமையாகவும் ஆற்றுவது

அ) ஞான மார்க்கம் ஆ) இராஜ மார்க்கம்

இ) கர்ம மார்க்கம் ஈ) பக்தி மார்க்கம்.

6. கருங்கல்லைப் பயன்படுத்தி முதன்முதலில் கட்டிடங்கள் கட்டியவர்கள்

அ) மௌரியர்கள் ஆ) குப்தர்கள்

இ) சேரர்கள் ஈ) குஷாணர்கள்.

7. ஒரு கடவுள் கோட்பாட்டை ஏற்று உருவ வழிபாட்டை ஏற்றுக் கொள்ளாத சமயம்

அ) இந்து சமயம் ஆ) கிறித்துவ சமயம்

இ) இஸ்லாமிய சமயம் ஈ) சீக்கிய சமயம்.

8. சாதி வேறுபாடு, உருவ வழிபாடு, பொருளற்ற சடங்கு போன்றவற்றை வன்மையாகக் கண்டித்தவர்

அ) இராமாநந்தர் ஆ) நாமதேவர்

இ) கபீர் ஈ) சைதன்யர்.

9. "உண்மைக்காக எதையும் துறக்கலாம். ஆனால் எதற்காகவும் உண்மையைத் துறக்காதே" எனக் கூறியவர்

அ) இராமகிருஷ்ணர் ஆ) அரவிந்தர்

இ) தயானந்தர் ஈ) விவேகானந்தர்.

10. சிவபெருமானின் உறைவிடமாகக் கருதப்படுவது

அ) கைலாய மலை ஆ) திருப்பதி மலை

இ) திருவரங்கம் ஈ) விந்திய மலை.

ஆ. கோடிட்ட இடத்தை பூர்த்தி செய்க : 10 × 1 = 10

11. பண்பாடு என்பது சீரிய வாழ்வு முறை என்று கூறியவர் ........................ ஆவார்.

12. முற்பட்ட வேத கால மக்கள் மன்றம் ........................ என்று அழைக்கப்பட்டது.

13. அகத்திய முனிவர் ........................ என்னும் முதல் தமிழ் இலக்கண நூலை எழுதினார்.

14. இந்து மதம் என்பதற்கு ........................ என்ற வேறு பெயரும் உண்டு.

15. பன்னிரு ஆழ்வார்கள் பாமாலை தொகுப்பிற்கு ........................ என்று பெயர்.

16. கலிங்கப் போருக்குப் பின் அசோகர் ........................ என்ற புத்த துறவியுடன் சென்று புத்த சமய கோட்பாடுகளைப் பரப்பினார்.

17. இஸ்லாமியத்தின் புனித நூல் ........................ ஆகும்.

18. நிம்பார்க்கரின் பக்தி நெறிக் கொள்கை ........................ என்றழைக்கப்படுகிறது.

19. 'இந்தியா இந்தியருக்கே' என்ற முழக்கத்தை எழுப்பியவர் ........................ ஆவார்.

20. கங்கை நதி இந்தியாவின் ........................ என்று அழைக்கப்படுகிறது.

இ. பின்வருவனவற்றைப் பொருத்துக : 10 × 1 = 10

| | | | |
|---|---|---|---|
| 21. | சத்யம் | அ) | விவேகானந்தர் |
| 22. | வியாகரணம் | ஆ) | மாமல்லபுரம் |
| 23. | கிருஹ்யபதி | இ) | முருகக் கடவுள் |
| 24. | மனோன்மணீயம் | ஈ) | வீரமா முனிவர் |
| 25. | அத்வைதம் | உ) | உண்மை |
| 26. | பஞ்சபாண்டவர்கள் இரதங்கள் | ஊ) | குருநானக் |
| 27. | தேம்பாவணி | எ) | பேராசிரியர் சுந்தரம் பிள்ளை |
| 28. | ஆதிகிரந்தம் | ஏ) | இலக்கண நூல் |
| 29. | இராமகிருஷ்ண இயக்கம் | ஐ) | குடும்பத் தலைவன் |
| 30. | காங்கேயன், கடம்பன் | ஒ) | சங்கரர். |

[ Turn over

ஈ) பின்வரும் வினாக்களுக்கு ஓரிரு சொற்களில் விடையளி 15 × 1 = 15

31. பண்பாட்டின் இயல்புகள் யாவை ?

32. திராவிட மொழிகள் எவை ?

33. சிந்து சமவெளி நாகரிக காலம் எது ?

34. ரிக் வேத கால மக்களின் பொழுதுபோக்குகள் யாவை ?

35. பிந்தைய வேத கால இலக்கியங்கள் எவை ?

36. ஆக்கினேயம் என்றால் என்ன ?

37. நாடக உலகின் தந்தை என போற்றப்படுபவர் யார் ?

38. மாணிக்கவாசகர் எழுதிய நூல்கள் யாவை ?

39. இந்து சமயம் வலியுறுத்தும் நான்கு மார்க்கங்கள் யாவை ?

40. சமண சமயக் கப்பலின் நங்கூரமாக போற்றப்படுவது எது ?

41. காளிதாசரின் இலக்கியப் படைப்புகள் யாவை ?

42. கிறித்துவம் என்ற சொல் எவ்வாறு பெறப்பட்டது ?

43. தென்னகத்தில் பக்தி நெறியைப் பரப்பியவர்கள் யார் ?

44. பிரம்ம ஞான சபை யாரால் தோற்றுவிக்கப்பட்டது ?

45. பஞ்சபூதங்கள் என்பவை யாவை ?

## பகுதி - ஆ

II. எவையேனும் **பதினைந்து** வினாக்களுக்கு ஒவ்வொன்றிற்கும் ஐந்து வரிகட்கு மிகாமல் விடையளி : 15 × 3 = 45

46. பண்பாடு பற்றி வால்டேர் கூறுவது யாது ?

47. ‘நாகரீகம்’ - சொல் விளக்கம் தருக.

48. போக்குவரத்தும், செய்தித்தொடர்பும் எவ்வாறு பண்பாட்டு ஒற்றுமைக்கு துணை புரிகின்றன ?

49. சிந்து சமவெளி நாகரிகத்தின் அழிவிற்கான காரணங்களைக் கூறு.

50. உபநிடதங்கள் - விளக்கு.

51. புராணங்கள் உணர்த்தும் செய்திகள் யாவை ?

52. பழந்தமிழரின் இசைநூல்களாக அறியப்படுவன யாவை ?

53. தமிழர் பண்டிகையாம் பொங்கல் திருநாளைப் பற்றி எழுதுக.

54. குருகுல வாசம் பற்றி எழுதுக.

55. மகாவீரர் போதித்த உண்மைகள் யாவை ?

56. துளசிதாசர் பற்றி குறிப்பு வரைக.

57. சோழர் கால சிற்பங்களை எவ்வாறு வகைப்படுத்தலாம் ?

58. ஜி.யு. போப் ஆங்கில மொழியாக்கம் செய்த தமிழ் இலக்கிய நூல்கள் யாவை ?

59. இஸ்லாமிய சமயக் கோட்பாடுகள் யாவை ?

60. இராமானுஜரின் தத்துவக் கோட்பாடு யாது ?

61. நாயன்மார்களுள் குறிப்பிடத்தக்கவர்கள் யாவர் ?

62. மறுமலர்ச்சி என்பது யாது ?

63. ஆரிய சமாஜம் - விளக்கம் தருக.

64. 'யோகா கல்வியின்' மூலம் உலகிற்கு இந்தியப் பண்பாடு எடுத்துரைக்கப்படுகிறது' எவ்வாறு ?

65. தூய்மையான சுற்றுச்சூழல் என்பது யாது ?

## பகுதி - இ

III. எவையேனும் பத்து வினாக்களுக்கு ஒவ்வொன்றிற்கும் பத்து வரிகட்கு மிகாமல் விடையளி : $10 \times 6 = 60$

66. நாகரிகத்திற்கும் பண்பாட்டிற்கும் உள்ள வேறுபாடுகள் யாவை ?

67. சிந்துவெளி மக்களின் கலையினை விவரி.

68. ஹரப்பா, மொஹஞ்சாதாரோ நகரங்களில் அமைந்திருந்த கட்டிடக் கலையின் சிறப்பு அம்சங்களை விவரி.

69. ரிக் வேத கால சமுதாய நிலையை விவரி.

70. புராணங்களின் இன்றியமையாமையை விவரி.

71. தமிழர் பண்பாட்டுக் கூறுகளில் தலையாயதாகிய 'காதல்', 'வீரம்' பற்றி விவரி.

72. திருக்கோயில்கள் இந்தியப் பண்பாட்டில் தமிழக பாங்கினை உலகறியச் செய்தமையை விவரி.

73. பௌத்தர் கால கலை வளர்ச்சியை விளக்குக.

74. மௌரியர் காலத்தில் அரசியல் நிலை எவ்வாறு இருந்தது ?

75. பிற்காலப் பாண்டியரின் 'இசை', 'நடன', 'நாடகக் கலை' பற்றி விளக்குக.

76. இந்தியப் பண்பாட்டு வளர்ச்சிக்கு கிறித்தவ தொண்டு நிறுவனங்களின் பணிகள் யாவை ?

77. இந்தியப் பண்பாட்டில் இஸ்லாமிய சமயத்தின் கொடைகள் யாவை ?

78. பக்தி இயக்கம் தோன்றக் காரணங்கள் யாவை ?

79. பிரம்ம சமாஜத்தின் சமய, சமுதாயத் தொண்டுகளைப் பற்றி எழுதுக.

80. இந்தியப் பண்பாட்டில் பறவை மற்றும் விலங்குகளுக்கு அளிக்கப்படும் சிறப்பினைக் கூறுக.

## பகுதி - ஈ

IV. எவையேனும் **ஐந்து** வினாக்களுக்கு ஒவ்வொன்றிற்கும் மூன்று பக்க அளவில் விடையளி:
$5 \times 10 = 50$

81. இந்தியப் பண்பாட்டு ஒற்றுமைக்குத் துணை புரிந்த காரணிகளைத் தொகுத்துக் கூறுக.

82. இந்தியப் பண்பாட்டிற்கு தமிழ்ப் பண்பாட்டின் கொடையினை தொகுத்து எழுதுக.

83. இந்தியப் பண்பாட்டிற்கு சமண சமயத்தின் பங்கினை விவரி.

84. ஆழ்வார்களின் அரிய அருட்தொண்டுகளை விவரி.

85. விவேகானந்தரின் வாழ்க்கை வரலாற்றையும், கொள்கைகள் மற்றும் சமுதாய சேவைகளையும் விவரி.

86. 'உலகப் பண்பாட்டிற்கு இந்தியாவின் கொடை' என்ற தலைப்பில் நீவிர் தரும் செய்திகளை விவரி.

87. இந்தியப் பண்பாடும் சுற்றுச் சூழலும் பற்றி ஒரு கட்டுரை வரைக.